[2001 செப்டம்பர் 7

59

கால்நடை மருத்துவமனை

***2678 திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி ஒன்றியம், கடமலைக்குண்டில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் அழைத்து, நிதிநிலையைப் பற்றி ஒரு பாடம் நடத்தினார்கள். அந்தக் கூட்டம் முடிந்து வெளியே வருகிறபோது, ஒரு சோகப் படம் பார்த்துவிட்டு வருகிறபோது எவ்வளவு அமைதியாக இருக்குமோ அவ்வளவு அமைதியுடன் நாங்கள் வெளியே வந்தோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கடமலைக்குண்டுக்கு வாருங்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *அதற்காகத்தான் வருகிறேன். கடமலைக்குண்டுக்கே வந்துவிடுகிறேன். காரணம், கடந்த ஐந்து ஆண்டுகாலத்தில் நிர்வாகத் திறமையின்மை காரணமாக நிதிநிலைமை இவ்வளவு மோசமாக இருக்கிறது. இருந்தபோதிலும்கூட, என்னுடைய தொகுதி என்ற முறையில் நான் கால்நடை மருத்துவமனை வேண்டுமென்ற ஒரு கருத்தை இங்கே வைக்கிறேன். ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் மூலம் 234 தொகுதிகளுக்கும் வேண்டிய நல்ல திட்டங்களைச் செய்து நல்ல அரசை நடத்திக் கொண்டிருக்கிற இந்த அரசு இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதற்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2001 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 60, திரு. வ.து. நடராஜன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

60–

கால்நடை மருந்தகம்

***3740–திரு. வ.து. நடராஜன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியம், திருப்பாலைக்குடியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதன்முதலிலே என்னுடைய தொகுதிக்கு ஒரு கோரிக்கை வைத்திருக்கிற காரணத்தாலே, எங்களுடைய இதய தெய்வம் அம்மா மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு செய்வார்கள் என்று சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 61, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

61–

குடியிருப்புகளைச் சீரமைத்தல்

***88–திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சென்னையில் பழுதடைந்துள்ள குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளைச் சீரமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?